மலேசிய இந்துதர்ம மாமன்றம்
2024/2025 ஆண்டிற்கான ஆன்மீக வளர்ச்சி தேசிய உபக்குழு அறிக்கை

ஆன்மீக வளர்ச்சி தேசிய உபக்குழு
ஆலோசகர் : தர்ம பூஷணம் சிவஸ்ரீ அ.ப. முத்து குமார சிவாச்சாரியார்
தலைவர்: திருமிகு இராதாகிருஷ்ணன் அழகுமலை அவர்கள்
தேசிய உபக்குழு பொறுப்பாளர்கள்: கோட்டம் (மாநிலப்பேரவை), அருள்நிலையத்தை பிரதிநிதிக்கும் பொறுப்பாளர்கள் 43-வது பேராளர் மாநாட்டு 2025-ஆம் ஆண்டறிக்கையில் இடம்பெற்றிருக்கும் பட்டியலிலுள்ளபடி ஆன்மீக வளர்ச்சி தேசிய உபக்குழு பிரதிநிதிகளாக இணைத்துக் கொள்ளப்படுவர்.

மனிதப் பிறவியின் நோக்கத்தை உணர்த்திடும் வகையில் ஆன்மீக நடவடிக்கைகள்

*மானிடப் பிறவி*யின் நோக்கமானது இப்பிறப்பில் இறையை உணர்ந்து மீண்டும் பிறவாமல் பேரின்ப நிலையில் திழைத்திருப்பதே. அந்நோக்கம் நிறைவேற மாமன்ற அன்பர்களுக்கான ஆன்மீக வளர்ச்சி தேசிய உபக்குழு மேற்கொள்ளும் நடவடிக்கைளாவன:

1. **நித்திய இல்லப்பூஜை**
   மாமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் இல்லப் பூஜையை தவறாமல் செய்தல் வேண்டும். இல்லப்பூஜை செய்முறை பயிற்சியை ஆண்டிற்கு ஒரு முறையாவது அருள்நிலையங்கள் மேற்கொள்ளல் வேண்டும்.






தர்ம சிகாமணி ஐயா திரு. கை. குமரகுருபரன் அவர்கள் தயாரித்து அளித்த இல்லப் பூஜை கையேட்டை இல்லப் பூஜை பயிற்சியில் பயன்படுத்தி கொள்ளலாம்.

2. வாராந்திர வழிபாடு & பிரார்த்தனை

(1) மாமன்ற உறுப்பினர்கள் இல்லங்களில் வாரம் ஒரு இல்லத்தில் வாரந்திரப் பூஜையும் கூட்டுப் பிரார்த்தனையையும் அருள்நிலையங்கள் மேற்கொள்ள வேண்டும்.



ச்சாஆ அருள்நிலையத்தின் வாரந்திர கூட்டுப் பிரார்த்தனை

(2) கூட்டுப் பிரார்த்தனை: அவ்வாரத்தில் இடம்பெறும் நாயன்மார்கள், ஆழ்வார்கள், அடியார்கள் ஜெயந்தியை ஒட்டி வரலாறு, உபதேசங்கள், அற்புதங்கள் குறித்து அல்லது பொதுவான இந்து சமயம் பற்றிய விளக்கும் வகையில் சொற்பொழிவுகள் ஆற்றுதல் வேண்டும்..

(3) உறுப்பினர்களின் ஜென்ம நட்சத்திரப் பிறந்த நாள் அன்றோ அல்லது அவர்களின் குடும்பத்தில் பிற விஷேச வைபவங்கள் போதும் வாராந்திரக் கூட்டுப் பிரார்த்தனை மேற்கொள்ளலாம்.

3. மாதாந்திர கூட்டுப் பிரார்த்தனை வழிபாடு / அந்தர் யோகம்

(1) மாதம் ஒரு முறை பொது மண்டபங்களில் / ஆலயங்களில் வார இறுதியில் அல்லது பொது விடுமுறை நாட்களில் அரைநாள் நிகழ்வாக கூட்டுப் பிரார்த்தனை மேற்கொள்ளல் வேண்டும்.

(2) சமய சொற்பொழிவுடன் தோத்திரப் பாராயணம் கூடிய அந்தர் யோகமாகவும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(3) அந்த தமிழ் மாதத்தில் இடம்பெறும் குருபூஜைகள் யாவையும் ஒன்றிணைத்து, குருமார்களின் வரலாறு, உபதேசங்கள் குறித்து விளக்கமளிக்கும் நிகழ்வாகவும் ஏற்பாடு செய்யலாம்.

(4) குடும்பத்துடன் மதிய உணவு பரிமாறி நிறைவு செய்து கொள்ளலாம்.

4. வருடாந்திர வழிபாட்டு யாத்திரை

அருள்நிலையங்கள், கோட்ட, தேசிய ரீதியில் வருடம் ஒருமுறை உறுப்பினர்கள் குடும்பத்துடன் உள்நாடு அல்லது புண்ணிய பூமி தலயாத்திரை, தீர்த்த யாத்திரை மேற்கொள்ளல் வேண்டும்.







5. **பூர்வாங்க மற்றும் சம்பூர்த்தி கும்ப பூஜை**



(1) மாமன்ற நிகழ்வுகளில் பூர்வாங்க கும்ப பூஜையும் பூர்வாங்க பாடல்களும் சம்பூர்த்தி மங்கலப் பூஜையும் சம்பூர்த்தி பாடல்களும் இடம்பெறுதல் வேண்டும்.

(2) அருள்நிலைய நிகழ்வுகளில் பூர்வாங்க சம்பூர்த்தி பூஜைகளை மேற்கொள்ள கும்பப் பூஜை செய்வதற்கான பயிற்சியையும் அருள்நிலையங்கள் மேற்கொள்ளல் வேண்டும்.

6. **குருபூஜைகள் :** அருள்நிலையங்கள் நால்வர் குருபூஜை & ஆதிசங்கரர் ஜெயந்தி, ஆழ்வார்கள் திருநட்சத்தினத்தன்று தவறாமல் குருபூஜைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

மலேசிய இந்துதர்ம மாமன்றம்
MALAYSIA HINDHUDHARMA MAAMANDRAM
(PPM-003-10-07051982)

ஆன்மீக வளர்ச்சி தேசிய உபக் குழு

ஸ்ரீ விசுவாசுவ வரு, கலியுகம் 5126

ஆதிசங்கரர், இராமானுஜர் ஜெயந்தி: நால்வர், சேக்கிழார் குருபூஜைகள்

தமிழ் மாதம் & திகதி	ஆங்கில திகதி & கிழமை	திருநாமம்	நட்சத்திரம்
சித்திரை 10	23.04.2025 புதன்	திருநாவுக்கரசர்	சதயம்
சித்திரை 19	02.05.2025 வெள்ளி	ஸ்ரீ ஆதிசங்கரர் ஸ்ரீ இராமானுஜர்	திருவாதிரை
வைகாசி 17	31.05.2025 சனி	சேக்கிழார்	பூசம்
வைகாசி 29	12.06.2025 வியாழன்	திருஞானசம்பந்தர்	மூலம்
ஆனி 16	30.06.2025 திங்கள்	மாணிக்கவாசகர்	மகம்
ஆடி 16	01.08.2025 வெள்ளி	சுந்தரமூர்த்தி சுவாமிகள்	சுவாதி

முக்கிய குறிப்பு : அருள்நிலைய ஆன்மீக வளர்ச்சி குழு ஏற்பாட்டில் அருள்நிலையம் அந்தந்த நாட்களில் மேற்கொள்ள வேண்டிய குருபூஜைகள்.







மலேசிய இந்துதர்ம மாமன்றம்

MALAYSIA HINDHUDHARMA MAAMANDRAM

(PPM-003-10-07051982)

ஆன்மீக வளர்ச்சி தேசிய உபக் குழு

ஸ்ரீ விசுவாசுவ ஶ்ரீ, கலியுகம் 5126

பன்னிரு ஆழ்வார்கள் திருநட்சத்திரங்கள்

தமிழ் மாதம் & திகதி	ஆங்கில திகதி & கிழமை	திருநாமம்	நட்சத்திரம்
சித்திரை 27	10.05.2025 சனி	ஸ்ரீ மதுரகவியாழ்வார்	சித்திரை
வைகாசி 26	09.06.2025 திங்கள்	ஸ்ரீ நம்மாழ்வார்	விசாகம்
ஆனி 21	05.07.2025 சனி	ஸ்ரீ பெரியாழ்வார்	சுவாதி
ஆடி 12	28.07.2025 திங்கள்	ஸ்ரீ ஆண்டாள்	பூரம்
ஐப்பசி13	30.10.2025 வியாழன்	ஸ்ரீ பொய்கையாழ்வார்	திருவோணம்
ஐப்பசி 14	31.10.2025 வெள்ளி	ஸ்ரீ பூதத்தாழ்வார்	அவிட்டம்
ஐப்பசி 15	01.11.2025 சனி	ஸ்ரீ பேயாழ்வார்	சதயம்
கார்த்திகை 18	04.12.2025 வியாழன்	ஸ்ரீ திருமங்கையாழ்வார்	கார்த்திகை
கார்த்திகை 19	05.12.2025 வெள்ளி	ஸ்ரீ திருப்பானாழ்வார்	ரோகிணி
மார்கழி 04	19.12.2025 வெள்ளி	ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார்	கேட்டை
தை 21	03.02.2026 செவ்வாய்	ஸ்ரீ திருமழிசையாழ்வார்	மகம்
மாசி 16	28.02.2025 சனி	ஸ்ரீ குலசேகராழ்வார்	புனர்பூசம்

முக்கிய குறிப்பு : அருள்நிலைய ஆன்மீக வளர்ச்சி குழு ஏற்பாட்டில் அருள்நிலையம் அந்தந்த நாட்களில் மேற்கொள்ள வேண்டிய குருபூஜைகள்.

7. பூஜைகள் செய்முறை வழிகாட்டிகள் தயாரித்தல்:

(1) கும்பபூஜை செய்முறை வழிகாட்டி

(2) இல்லவழிபாட்டிற்கான வழிகாட்டி காணொளி படச்சுருள்

(3) குரு பூஜைகள் செய்யும் வழிகாட்டி

8. மாமன்ற தினம் : ஞானாசிரியர் ஜெயந்தி தினம்

- அருள்நிலையங்கள் ஒவ்வொரு வருடமும் மார்கழி மாத சதயம் நட்சத்திர நாளை மாமன்ற தினமாக கொண்டாடுதல் வேண்டும்.

9. தேசிய ரீதியான பன்னிரு திருமுறைப் பாராயணப் பெருவிழா

- வருடாந்திர தேசிய அளவிலான பன்னிரு திருமுறை பாராயணப் பெருவிழாவை கணேச கோட்டப் பேரவை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். மற்ற கோட்டங்களும் ஏற்று நடத்த முன் வர வேண்டும்.
- ஆதித்தன் கோட்டப் பேரவை சிவபுராணம் பாராயண விழாவையும் விநாயகர் அகவல் பாராயண விழாவையும் சிறப்பாக நடத்தியது பாராட்டுக்குரியது.

10. ஜென்ம நட்சத்திர பிறந்த நாள்

- இந்துக்கள் ஜென்ம நட்சத்திரப் பிறந்த தினத்தை பிறந்த நாளாக கொண்டாட வேண்டும்.
- பிறந்த தமிழ் மாதமும் நட்சத்திரமும் தெரிந்தால் தங்களின் ஜென்ம நட்சத்திரத்தைத் தெரிந்து கொள்ளலாம்.
- ஜென்ம நட்சத்திர நாளில் கோயிலுக்குச் சென்று வழிபடுவது மிகவும் உத்தமம்.
- ஒவ்வொரு தமிழ் மாதத்திலும் வரும் ஜென்ம நட்சத்திரத்தன்று கோயிலுக்குச் சென்று வழிபடுவது அவசியமாகும்.

11. மாமன்ற பிரார்த்தனை பாமாலை

- மாமன்ற பிரார்த்தனை பாமாலை தொகுத்து வெளியிடப்படும்.
- மாமன்ற பஜனைப் பாடல்கள் பாமாலையும் தொகுத்து வெளியிடப்படும்.

12. மாமன்ற தமிழ் நாள்காட்டி

- குறைந்த செலவில் மாமன்ற தமிழ் e-நாள்காட்டி வெளியிடப்படும்.

மாமன்றத்தின் ஆன்மீக வளர்ச்சி தேசிய உபக்குழு அமைப்பு முழுமைபெறின் எதிர்வரும் ஆண்டுகளில் தரவுகள் நிறைந்த முழு அறிக்கையும் தயாரித்து வழங்கப்படும். மாமன்றத்தின் ஆன்மீக வளர்ச்சி குறித்து தங்கள் கருத்துக்கள் பெரிதும் வரவேற்கப்படுகின்றது. தொடர்பு கொள்ளவும் வேண்டுகிறோம்.

அன்புடன்,

என்றென்றும் மாமன்ற சேவையில் அடியேன்,

இராதாகிருஷ்ணன் அழகுமலை
தொலைபேசி: **019-264 8667**
மின்னஞ்சல்: alaradha5669@gmail.com